செ.வெ.எண்: 13/செப்டம்பர் நாள்:07.09.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## இராமேஸ்வரம் நகரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் 06-09-2017 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், இராமேஸ்வரம் நகரத்தினை தூய்மைப்படுத்திட மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப்பணிகளை நேரடியாக சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் அவர்களின் அறிவுறுத்தலின்படி இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி ஆகிய பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், அனைத்து அரசுத் துறை அலுவலர்களுடன் "பசுமை இராமேஸ்வரம்" குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இராமேஸ்வரம் நகருக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்திடும் விதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து அலுவலர்களிடத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் 06.09.2017 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலின் அருகில் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பயன்பாட்டிற்கென்று அமைக்கப்பட்டுள்ள மங்கள தீர்த்தம் பூங்காவிற்கு நேரடியாக சென்று, பொதுமக்களுக்கு தேவைப்படும் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட வசதிகள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும் எனவும், அதனைத் தொடர்ந்து அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலின் அருகில் உள்ள வாகன நிறுத்துமிடத்திற்கு நேரடியாக சென்று, சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதற்கு ஏதுவாக திருக்கோயில் வளாகத்தினை தூய்மையுடனும், பாதுகாப்புடனும் பராமரித்திட வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடத்தில் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, இராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடற்கரையில் முன்னோர்களுக்கு செய்யப்படும் சடங்குகளின் போது பக்தர்கள் ஆடைகளை கடற்கரையில் விட்டுச் செல்லும் பழக்கம் இருந்து வருகின்றது. இதனால் கடல் நீர் மாசுபடுகிறது. இதனை தவிர்த்திடும் விதமாக பொதுமக்கள் பழைய ஆடைகள், மலர்கள் உள்ளிட்ட பொருட்களை கடற்கரையில் விட்டுச்செல்லாமல் அதற்கென்று அமைக்கப்பட்டுள்ள இடத்தினை பயன்படுத்தி சுகாதாரத்தினை மேம்படுத்திட ஒத்துழைப்பு நல்கிட பொதுமக்களிடம் தகுந்த முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது இராமேஸ்வரம் வட்டாட்சியர் திரு.ஆ.கணேசன், இராமேஸ்வரம் நகராட்சி ஆணையாளர் (பொ) திருமதி.தனலெட்சுமி, உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**